අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/PEES/P/31 | ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. | දිනය / திகதி / Date 2023.01.20

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,

**பாடசாலைகளில் முதன்மை நிலை ஒன்றில் (தரம் 1 மற்றும் 2 வகுப்புக்கள்) கற்கும் மாணவர்களின் ஆங்கில மொழி பேசும் திறனை மேம்படுத்தல்**

21 ஆம் நூற்றாண்டுக்கான உலகளாவிய சமூகத்தில் செயற்படக்கூடிய இயலுமை கொண்ட பிரஜைகளை உருவாக்குவதற்கும் விரைவாகப் புதுப்பிக்கப்படும் உலக அறிவு மற்றும் தொழினுட்பத் திறன்களுக்குள் நுழைவதற்குத் தேவையான அடிப்படைகளை ஏற்படுத்தித் தருவதற்கும் ஆரம்ப நிலையிலிருந்தே மாணவர்களுக்கு ஆங்கில மொழித் திறன்களை வழங்குவது மிக முக்கியமாகும். இத்தேவைப்பாட்டை இனங்கண்டு பாடசாலை முறைமைக்குள் தரம் 3 இல் இருந்து தரம் 11 வரையில் கட்டாய பாடமாக ஆங்கில மொழி கற்பிக்கப்பட்டு வருகின்றது. அதேபோல் ஆரம்ப வகுப்புகளில் (தரம் 1 – 5) ஆங்கில மொழி பேசும் திறனை விருத்தி செய்வதற்காக "**செயற்பாட்டை அடிப்படையாகக்கொண்ட வாய் மொழி ஆங்கிலம்**" (Activity Based Oral English) வேலைத்திட்டம் 1998 ஆம் வருடத்தில் ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டு இது வரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2. புதிய கல்வி மறுசீரமைப்புகளின் ஊடாக ஆங்கில மொழி கற்பிப்பதற்காக தற்போது பாடசாலைகள் முறைமைக்குள் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டத்தை மேலும் வலுவூட்டுவதற்கும் புதிய வேலைத்திட்டத்தை அறிமுகம் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு ஆரம்ப நிலையிலிருந்தே விரிவாக "**ஆங்கில மொழி பேசுதல் மற்றும் செவிமடுத்தல் திறன்களை மேம்படுத்தல்**" என்பதில் பிரதான கவனம் செலுத்தப்படுகிறது.

3. இதன்படி தரம் ஒன்றிலிருந்தே மாணவர்கள் ஆங்கில மொழித்திறனை வெளிப்படுத்த பாடசாலையில், வகுப்பறையில் மற்றும் அதற்கு மேலும் பல சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதற்கான விசேட வேலைத்திட்டங்களாக "தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டு வகுப்புகளில் மாணவர்களுக்கான பேச்சு ஆங்கில மொழி வேலைத்திட்டத்தை" கல்வி அமைச்சு தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து ஆரம்பித்துள்ளது.

3.1 **வேலைத்திட்டத்தின் நோக்கங்கள்:-**

**1.** ஆங்கில மொழி பேசுதல் மற்றும் செவிமடுத்தல் திறன்களை **(Listening and Speaking Skills)** தரம் ஒன்றிலிருந்தே மாணவருள் விருத்தி செய்தல்.

II. ஆங்கில மொழியைப் பேசுவதற்காக மாணவரிடத்தில் காணப்படும் பயம் மற்றும் சந்தேகத்தை அகற்றுதல்

III. ஆங்கில மொழி மிக நெருக்கமான, இனிமையான மொழி என்பதை மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் உறுதிப்படுத்தல்

IV. தரம் மூன்றிலிருந்து மாணவர்களுக்கு ஆங்கில மொழியை ஒரு பாடமாகக் கற்பதை இலகுவாக்குவதற்கு முறையான மற்றும் வலுவான அடிப்படையை ஏற்படுத்தல்

3.2 **வேலைத்திட்ட உள்ளடக்கம் மற்றும் அறிமுகம் செய்யும் விசேட அம்சங்கள்:-**

புதிய கல்வி மறுசீரமைப்புகளின் கீழ் புதியதான " செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஆங்கிலம்" (**Activity Based Oral English)** வேலைத்திட்டம், ஆரம்பக் கலைத்திட்டத்திற்கு இணையாக விசேடமாக சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் மற்றும் கணித பாடங்களை அடிப்படையாகக் கொண்ட சொல் வளம் மற்றும் வகுப்பறை அறிவித்தல்களுடன் கூடிய உள்ளடக்கம், கதைகள், பாடல்கள் மற்றும் நாடகங்கள் உள்ளிட்ட காணொளி, திட்டமிடப்பட்ட விளையாட்டுக்கள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றுடன் ஆரம்ப ஆசிரியர்களுக்கான ஆசிரியர் வழிகாட்டி, வள மூலங்கள், மேலதிக வாசிப்புகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்படும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

அதற்கும் மேலாக எதிர்காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்காக ஆங்கில மொழித் திறன்கள் மற்றும் ஆங்கில மொழியைக் கற்பிக்கும் வழிமுறைகள் தொடர்பாக தொடர்ச்சியான பயிற்சிச் சந்தர்ப்பங்களையும் வழங்குவதற்கு இவ் வேலைத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது.

3.3 **ஆசிரியர் பயிற்சி மற்றும் அதிபர்களுக்கு அறிவூட்டம் செய்தல்:-**

3.3.1 "தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டு வகுப்புகளில் மாணவர்களுக்கான பேச்சு ஆங்கில மொழி வேலைத்திட்டம்" தொடர்பாக மாகாண மட்டத்தில் தெரிவு செய்து அனுப்பிவைக்கப்படும் வளவாளர்களைப் பயிற்றுவித்தல் இன்றளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி முதன்முறையாக இப் பயிற்றுனர்களைப் பயிற்றுவிக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக மாகாணங்களில், வலயங்களில் ஆரம்பக் கல்வி விடயப் பொறுப்பு பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் மாகாணங்களில், வலயங்களில் ஆரம்பக் கல்வி ஆங்கில பாட விடயப் பொறுப்பு பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள். இவ் இரண்டு பாடத் தொகுதியினர்களுக்குமிடையே நல்லிடைத்தொடர்பு மற்றும் புரிதலுடன் கூடியதாக பாடசாலைகளில், வகுப்பறைகளில் இப் புதிய வேலைத்திட்டத்தை எதிர்பார்க்கப்படும் வகையில் நடைமுறைப்படுத்தச் செய்வது இதன் நோக்கமாகும்.

3.3.2 இதற்கமைய தங்கள் மாகாணத்திலும் இவ்வேலைத்திட்டம் தொடர்பாக தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும்போதும் ஆரம்ப பிரிவில்/ பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பது மிகவும் அவசியமாகும். இதன் மூலம் பாடசாலையில் பயனுறுதி மிக்கதாக இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும்.

3.3.3 தங்கள் மாகாணத்தில் பயிற்சி பெற்ற வளவாளர்களால் 2023 ஆம் வருடத்தில் தரம் ஒன்றில் கற்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட ஆரம்ப ஆசிரியர்களைப் பயிற்றுவித்தலை 2023 மார்ச் மாதத்திற்கு முன்னர் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

3.3.4 மேலும் பாடசாலைகளின் அதிபர்களுக்கும் இவ் வேலைத்திட்டம் தொடர்பாக அறிவூட்டம் செய்வதுவும் முதன்மைத் தேவைப்பாடாகும். பொருத்தமான வழிமுறைகளைப் பயன்படுத்தி ஆரம்ப பாடசாலைகள் மற்றும் ஆரம்ப பிரிவு நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவூட்டம் செய்வதுவும் ஆசிரியர் பயிற்சிக்கு இணையாக இடம் பெறவேண்டும்.

3.3.5 2023 ஆம் வருடத்தில் தரம் இரண்டிற்கான ஆசிரியர் பயிற்சிகள், இது தொடர்பான பயிற்றுனர்களைப் பயிற்றுவித்தல் வேலைத்திட்டத்தின் பின்னர் அறியத்தரப்படும்.

3.4 **வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் கணிப்பீடு**

3.4.1 தரம் ஒன்றிற்கு அறிமுகப்படுத்தப்படும் இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு, தரம் ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் மற்றும் ஆரம்ப பிரிவில் /பாடசாலையில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர் இருவருக்கும் தரப்படுகின்றது. இங்கு பாடத்திட்டமிடலில் இருந்து நடைமுறைப்படுத்துதல் ,கணிப்பீட்டுச் செயற்பாடுகள் வரையில் நல்லிடைத்தொடர்புடன் செயற்பட வேண்டும். இதற்காகத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்வது அதிபர்களின் வகைகூறலாகும். பாடசாலை மேற்பார்வை நடைமுறைகள் ஊடாக இது நடைமுறைப்படுத்தப்படும் தன்மையைக் கண்காணிப்பிற்கு உட்படுத்துவதுடன் தேவையான பின்னூட்டல்கள் மாகாண வலய அதிகாரிகளால் வழங்கப்படும்.

3.4.2 தற்போது நடைமுறையில் உள்ள பாடசாலை நேரத்துள் கற்றல் கற்பித்தல் செற்பாடுகள் , பாட இணைச் செயற்பாடுகளின்போது பொருத்தமான வகையில் நெகிழும் தன்மையுடன் இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலும் என்பதுடன் வரும் காலங்களில் புதிய கல்வி மறுசீரமைப்புகள் ஊடாக இவ் வேலைத்திட்டத்திற்கு மேலும் விரிவான கால அவகாசம் கிடைக்கப்பெறும்.

3.4.3 இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் அதேபோல் கணிப்பீடு செய்யவேண்டியது செவிமடுத்தல் மற்றும் வாய்மொழிப் பயன்பாட்டை மாத்திரமேயாகும். ஆங்கிலச் சொற்களை எழுதுதல் மற்றும் வாசித்தல் இவ்வேலைத்திட்டத்தில் இடம்பெறவில்லை ஆதலால் கணிப்பீட்டிலும் இவற்றைச் செய்ய முடியாது என்பதை அழுத்தமாகக் கவனத்திற்குத் தருகின்றேன்.

3.5 **அறிவூட்டம் செய்தல், கண்காணிப்பு, பின்னூட்டல் வழங்குதல் மற்றும் அறிக்கை**

இவ் வேலைத்திட்டம் தொடர்பாக சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களும் அறிவூட்டம் செய்யப்பட வேண்டும். வேலைத்திட்டத்தைக் கண்காணித்து தேவையான பின்னூட்டல்களை வழங்குதல் பாடசாலை, வலய மற்றும் மாகாண மட்டத்தில் இடம்பெற வேண்டும். அத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் கண்காணிப்புப் படிவத்தினூடாக உரிய அறிக்கை கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். முறையான கண்காணிப்பு சகல மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் மற்றும் பின்னூட்டல் வழங்குவதன் மூலம் இவ் வேலைத்திட்டத்தை வலுவாகவும் தொடர்ச்சியாகவும் நடைமுறைப்படுத்துவது மாகாண ஆரம்பக் கல்வி மற்றும் ஆங்கில பாட விடயப் பொறுப்பு பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்பு என்பதுடன் வேலைத்திட்டத்தைக் கண்காணித்து கல்வி அமைச்சிற்கு அறிக்கையை அனுப்பி வைப்பது சகல மாகாண ஆரம்பக் கல்வி விடயப் பொறுப்பு பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களினதும் வகை கூறலாகும்.

இவ் வேலைத்திட்டத்திற்கு முன்னுரிமையளித்து மிகச் சிறப்பாக பாடசாலை முறைமைக்குள் நடைமுறைப்படுத்துவதற்காக தங்கள் மாகாணத்தில் உரிய அதிகாரிகள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்களை நெறிப்படுத்துவீர்கள் என்பதை உறுதியாக எதிர்பார்க்கின்றேன்.

எம்.என்.றணசிங்ஹ

கல்விச் செயலாளர்

பிரதிகள்:-

01. பிரதம செயலாளர் , ...................... மாகாணம் - அ. கொ. பொ
02. மாகாணக் கல்விச் செயலாளர், ............................ மாகாணம் அ.கொ.பொ